Members are requested to note, that in view of the MCA Circulars, the Company is pleased to provide attendance to the AGM through VC/OAVM facility. The Shareholders will be required to login on www.evotingindia.com using their e-voting User ID and password. The link to view and participate in the AGM proceedings will be available on www.evotingindia.com. The details for participation to the AGM, registration as a speaker and to ask questions on the agenda for the AGM are included in the Notes to the AGM Notice. Members are requested to update the address/ email their DP by sending a written request by email to xlfield@gmail.com.

In case of any queries/grievances, connected with facility for voting by electronic means, please contact Mr. Rakesh Dalvi, Sr. Manager, (CDSL,) Central Depository Services (India) Limited, A Wing, 25th Floor, Marathon Futurex, Mafatlal Mill Compounds, N M Joshi Marg, Lower Parel (East), Mumbai - 400013 or send an email to helpdesk.evoting@cdslindia.com or call on 022-23058542/43.

By Order of the Board of Directors
For, Nagarjuna Agri-Tech Limited
Sd/-
Rachna Suman Shaw
Managing Director

Date: 07.09.2026
Place: Hyderabad

इण्डियन ओवरसीज़ बैंक Indian Overseas Bank

Stressed Assets Management Department
Central Office, 763, Anna Salai, Chennai - 600 002

## TRANSFER OF NPA LOAN EXPOSURES TO ARCs & PERMITTED TRANSFEREEs THROUGH e-AUCTION UNDER SWISS CHALLENGE METHOD

**Indian Overseas Bank (IOB)** Invites Expression of Interest (EOI) from **ARCs and Permitted Transferees** for the proposed **transfer of NPA loan Exposures** in respect of the following Portfolio of NPA Loans under **SWISS CHALLENGE method** in **Lot 5 during Q2 of FY 2026-27** on **"as is where is"**, **"as is what is" "whatever there is"** and **"without recourse"** basis:

| NAME OF THE PORTFOLIO | BRANCH |
|---|---|
| PORTFOLIO OF EDUCATION LOAN NPA ACCOUNTS | PAN INDIA |

Interested eligible bidders are requested to intimate their willingness to participate in the **e-Auction scheduled on 18.09.2026** by way of an **"Expression of Interest"** to the email id **saletoarc@iob.bank.in** on or before **15.09.2026.**

For further details please visit our **Bank's website (www.iob.bank.in) → click on TENDERS → ARC-Cell → Notification dated 08.09.2026 for the above Portfolio of NPA Loans.**

IOB reserves the right to cancel or modify the process and amend any of the terms of the notification at any stage and the same will not necessarily be carried out through advertisement but will be notified directly on the Bank's website.

**Place: Chennai**
**Date: 08/09/2026**
**General Manager**

सेन्ट्रल बैंक ऑफ इंडिया Central Bank of India — BOBCAPS

## ADVERTISEMENT INVITING EXPRESSION OF INTEREST ("EOI") FOR TRANSFER OF STRESSED LOAN EXPOSURE IN THE ACCOUNTS OF M/s NSL SUGAR LIMITED & M/s NSL TEXTILES LIMITED ("NSL") TO PERMITTED TRANSFEREES THROUGH THE SWISS CHALLENGE METHOD

BOB Capital Markets Limited (**"BOBCAPS"** or **"Process Advisor"**) has been mandated by Central Bank of India (**"CBoI"** or **"Bank"**) for assisting and advising the Bank on the bid process and matters incidental thereto in connection with the assignment of debt/ financial assets arising out of such debts of **M/s. NSL Sugar Limited and M/s NSL Textiles Limited** (collectively referred to as **"NSL"**) through Swiss Challenge Method to the Permitted Entities/Transferees and ARCs in accordance with the regulatory guidelines issued by Reserve Bank of India (**"RBI"**), including but not limited to the RBI (Commercial Banks - Transfer and Distribution of Credit Risk) Directions, 2025 (the **"RBI Directions"**) and as amended from time to time and approved by the Bank's internal board.

BOBCAPS, on behalf of CBoI invites Expressions of Interest (**"EOI"**) from the Permitted Entities/Transferees and ARCs under the RBI Directions, to acquire the debt/ financial assets arising out of such debt of NSL along with underlying security through assignment. The Bank is proposing to undertake a Swiss Challenge Method on **"All Cash"** basis. Transfer of debt with underlying assets via assignment shall be on **"As is where is"**, **"As is what is"**, **"As is how is"**, **"Whatever there is"** and **"Without recourse"** basis, without any representation, warranty or indemnity by the Bank, based on existing offer in hand (**"Anchor Bid"**). Considering that the auction is under the **"Swiss Challenge Method"** on the Anchor Bid, the Anchor Bidder shall have specific preferential rights as set out in the Bid Process Document (**"BPD"**) and further have the right to match the highest bid under Right of First Refusal (**"ROFR"**).

BOBCAPS, on behalf of the Bank, hereby invites Expressions of Interest (**"EOI"**) for assignment of debt/financial assets arising out of such debts in the accounts of NSL.

| | |
|---|---|
| **Last Date for submission of EOI** | September 11, 2026 by 05:00 PM |
| **Access to Physical Data Room for Due Diligence** | September 11, 2026 to September 25, 2026 till 05:00 PM |
| **Offer in Hand from Anchor Bidder** | INR 53.50 Crore (Rupees Fifty-Three Crore and Fifty Lakhs only)* |
| **Refundable Participation Fee (RPF)** | INR 1.00 Crore (Rupees One Crore only) |
| **Minimum Markup @ ~5.61% of Anchor Bid** | INR 3.00 Crore (Rupees Three Crore Only) |
| **Bidding Start Price** | INR 56.50 Crore (Rupees Fifty-Six Crore and Fifty Lakhs only) |
| **Bid Increment Amount (Bid Multiplier)** | Minimum of INR 1.00 Crore (Rupees One Crore only) & in multiples thereof |
| **Date of Auction under Swiss Challenge** | September 28, 2026 |
| **Earnest Money Deposit (EMD) by Highest Bidder** | 10% of the Bid Value submitted by the Highest Bidder |

* Total Offer for both the accounts. For bifurcation of offers and detailed information, interested bidders may visit the Process Advisor's website at www.bobcaps.in/tenders and also, at the Bank's website at www.centralbank.bank.in/en/public-notices. In case of any clarifications, please contact the following:

| Contact Person | Tel. No. | Email ID |
|---|---|---|
| Mr. Ashish Shrivastava-DGM, CBoI | +91 7506982250 | dgmrecovery2@centralbank.bank.in |
| Mr. Mrigank Jha-AGM, CBoI | +91 9161538666 | agmarcsales@centralbank.bank.in |
| Mr. Wasim Shaikh, AVP-BOBCAPS | +91 8976771242 | projecttextile@bobcaps.in |
| Ms. Maitri Sheth, Manager-BOBCAPS | +91 9867939303 | |

**Note :** Please note that the bid process as envisaged in this advertisement shall be subject to final approval of the Competent Authority of the Bank. CBoI/ BOBCAPS (on instructions of the Bank) reserves the right to cancel or modify the bid process and/or disqualify any shortlisted eligible bidders without assigning any reason and without any liability. This is not an offer document and nothing contained herein shall constitute a binding offer or a commitment to sell any debt/asset. Applicants should regularly visit the above websites to keep themselves updated regarding clarifications/ amendments/ time-extensions, if any. The Bank reserves the right to amend and/or annul this invitation including any timelines or the process therein, at any time, without giving or assigning any reasons or assuming any liability or costs. Any such amendment shall be available on the above websites/ Virtual Data Room or shared through email with shortlisted eligible bidders. BOBCAPS or the Bank shall not be held liable for any failure on part of the shortlisted eligible bidders to keep themselves updated of such modifications.

Sd/-
Issued by BOBCAPS, Process Advisor on behalf of Central Bank of India, SAM & Recovery, HO, Mumbai

Place : Mumbai
Date : September 9, 2026

HORIZON INDUSTRIAL PARKS

# HORIZON INDUSTRIAL PARKS LIMITED

**Regd. Office :** One World Centre, Unit No. 1501B, Tower 1, 841, Jupiter Textile Mills, Senapati Bapat Marg, Lower Parel, Mumbai - 400013, Maharashtra, India.
**CIN:** U60231MH2009PLC222156
**Email:** compliance@hiparks.com; **Website:** www.hiparks.com; **Telephone:** 91+ 22 4158 1000

## NOTICE OF 17TH ANNUAL GENERAL MEETING AND E-VOTING INFORMATION

Notice is hereby given that the 17th Annual General Meeting of the Company will be held on Wednesday, September 30 2026 at 11:00 a.m. (IST) through video conferencing / Other Audit Visual Means **("VC/OAVM")** facility to transact the businesses as set forth in the notice of the AGM ("Notice"), in compliance with the applicable provisions of the Companies Act 2013 and rules made thereunder, Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations 2015 **("SEBI Listing Regulations")** read with General Circular Nos. 14/2020 dt. April 8, 2020; 20/2020 dt. May 5, 2020 and subsequent circulars issued in this regard, latest being General Circular No. 03/2025 dt. September 22, 2025, issued by the Ministry of Corporate Affairs **("MCA Circulars")** and circulars issued by SEBI and other applicable circulars in this regard, permitting the holding of AGM through VC/OAVM without physical presence of members at a common venue. Members can join and participate in the AGM through VC/OAVM facility only.

In compliance with SEBI Listing Regulations and MCA Circulars, electronic copies of the Notice of the AGM and Annual Report for the Financial Year 2025-26 have been sent to all the Members whose email addresses are registered with the Company /Depository Participant(s) /Registrar and Share Transfer Agent ("RTA"). The AGM Notice and Annual Report of the Company for the financial year 2025-26 are also available on the websites of the Company at www.hiparks.com, the RTA at https://www.kfintech.com/, and the stock exchanges namely, BSE Limited and National Stock Exchange of India Limited, at www.bseindia.com www.nseindia.com, respectively. Members, including those who have not registered their email addresses with Company/Depository Participant(s), can download the AGM Notice and Annual Report from any of the said websites. The electronic dispatch of Notice and Annual Report has been completed on Tuesday, September 8, 2026.

Further, in accordance with Regulation 36(1)(b) of the SEBI Listing Regulations, a letter providing the weblink for accessing the Annual Report for the financial year 2025-26 has been sent to those members who have not registered/updated their email address with the Company/DP/RTA.

Members whose email address is not registered with the RTA are requested to contact their respective Depository Participant (DP) for registration of their email address, upon which they will receive the AGM Notice, Annual Report, and e-voting user ID and password by email. Detailed procedure for registering the email address and for receipt of e-voting user ID and password and the manner of remote e-voting and e-voting during the AGM, is available in the AGM Notice.

**REMOTE E-VOTING**

In compliance with the provisions of Section 108 of the Companies Act 2013 and Rule 20 of the Companies (Management and Administration) Rules, 2014 as amended from time to time and the provisions of Regulation 44 of the SEBI Listing Regulations and Secretarial Standard on General Meetings (SS-2) issued by the Institute of Company Secretaries of India, the Company is providing to its members the facility of remote e-voting before / during the AGM in respect of the businesses to be transacted at the AGM and for this purpose the Company has appointed RTA for facilitating voting through electronic means.

The detailed instructions for remote e-voting and e-voting during the AGM are given in the Notice of the 17th AGM. Members are requested to take note of the following:
(a) The remote e-voting facility would be available during the following period:

| Sr. No. | Details/Activity | Particulars |
|---|---|---|
| 1. | Date and time of commencement and of remote e-voting | **Commencement:** Saturday, September 26, 2026 **Conclusion:** Tuesday, September 29, 2026 |
| 2. | Cut-Off Date | **Cut-Off Date :** Wednesday, September 23, 2026 |

The remote e-voting module shall be disabled for voting after 5:00 p.m. on Tuesday, September 29, 2026.

(b) Members whose name is registered in the Register of Members or in the register of beneficial owners maintained by the depositories as on the cut-off date only shall be entitled to avail the facility of remote e-voting / e-voting during the AGM. Once the vote on a resolution is cast by the Member, he / she shall not be allowed to change it subsequently. The Members who have not cast their vote electronically, and are otherwise not barred from doing so, can exercise their voting rights through the e-voting systems during the AGM. The Company will make necessary arrangements for e-voting during the AGM. Members who have cast their votes by remote e-voting prior to the meeting may also attend the AGM but they are not entitled to cast their vote again during the AGM.

(c) The Members who wish to speak during the meeting may register themselves as speakers for the AGM to express their views. They can visit https://emeetings.kfintech.com and login through the user id and password provided in the mail received from Kfintech. On successful login, select 'Speaker Registration' which will open from September 26, 2026 to September 28, 2026. Members shall be provided a 'queue number' before the meeting. The Company reserves the right to restrict the speakers at the AGM to only those Members who have registered themselves, depending on the availability of time for the AGM.

(d) The instructions for attending the AGM through VC / OAVM and the manner of e-voting is provided in the Notice convening the AGM for Members who have registered their email address as also for those Members who hold shares in physical form or who have not registered their email address.

(e) Any person who becomes a Member of the Company after the Notice is sent but holds shares on the cut-off date i.e. Wednesday, September 23, 2026, may obtain the login ID and password by sending request to RTA at evoting@kfintech.com.

(f) CS Rupal Jhaveri, Practising Company Secretary, has been appointed as Scrutinizer to scrutinize the remote e-voting process before / during the AGM by logging into website of RTA at www.evoting.kfin.com using their e-voting login credentials.

(g) Members may kindly note that the Company will provide webcast of the proceedings of AGM. Members who are entitled to participate in the AGM, can view the proceedings of AGM by logging into website of RTA at https://evoting.kfintech.com/ using their e-voting login credentials.

For any query, clarification or grievance connected with remote e-voting, Members may contact Mr. Anandan, at evoting@kfintech.com or call KFintech's toll free No. 1800-309-4001.

For **Horizon Industrial Parks Limited**
*(formerly known as Horizon Industrial Parks Private Limited)*
sd/-
Shraddha Poddar
Company Secretary and Compliance Officer
Membership No.: A23666

Place: Mumbai
Date: September 8, 2026

# தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கு கள் இறக்க அனுமதிக்கலாம் !

## நீதிபதி கோகுல்தாஸ் ஆணையம் பரிந்துரை

கள்ளக்குறிச்சி, செப். 9

கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாபுரம் பகுதியில் 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடந்த கள்ளச்சாராய விபத்து தமிழகம் முழுவதையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. மெத்தனால் கலந்த விஷச்சாராயத்தை அருந்தியதால் அறுபதுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

நூற்றுக்கணக்கானோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றனர். பெரும்பாலும் தினக்கூலி மற்றும் சமூகப் பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவினரே இந்த சோகத்திற்கு ஆளாயினர். சம்பவம் வெளியான உடன் அரசு நிவாரணம் அறிவித்ததுடன், ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கோகுல்தாஸ் தலைமையில் ஒருநபர் விசாரணை ஆணையத்தை அமைத்தது. ஆணையம் கள ஆய்வு, சாட்சியங்கள் மற்றும் தொடர்புடைய அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்து அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கை சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆணையம் சம்பவத்தின் பின்னணியை விரிவாக ஆய்வு செய்தது. மெத்தனால் சென்னையிலிருந்து கள்ளக்குறிச்சிக்கு கொண்டுவரப்பட்டு கள்ளச்சாராய தயாரிப்பில் பயன்படுத்தப்பட்டது. இதைக் கண்காணிக்க வேண்டிய மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களின் கவனக்குறைவே இந்த சோகத்திற்கு முக்கிய காரணம் என்று ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், காஞ்சிராபாளையம் பகுதிகளில் உள்ள காவல் நிலைய அதிகாரிகள், தடை அமலாக்கப் பிரிவு அதிகாரிகள், கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்டோர் பொறுப்பை தவறியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் மீது துறைசார் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை ஆணையம் பரிந்துரைத்துள்ளது. அடுத்த தலைமுறையின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்தலாம் என்று ஆணையம் கூறியுள்ளது. அது சாத்தியமில்லை என்றால் படிப்படியாக மதுவிலக்கை அமல்படுத்த அரசு பரிசீலிக்கலாம். கள் இறக்கி விற்க உரிமம் வழங்குவதும், அதற்கு ஏற்ற வரி விதிப்பதும் கருத்தில் கொள்ளப்படலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

டாஸ்மாக் விற்பனையைப் பொறுத்தவரை, இந்திய தயாரிப்பு வெளிநாட்டு மதுபான வகைகளின் விலையை ஐம்பது சதவீதம் குறைக்கலாம் என்று ஆணையம் பரிந்துரைத்துள்ளது. விலை குறைப்புக்காக மதுபானங்களை டெட்ரா பேக்கில் அடைத்து விற்கும் முறையை அரசு பரிசீலிக்கலாம். டாஸ்மாக் கடைகளின் வணிக நேரத்தையும் மாற்றலாம். காலை ஒன்பது மணி முதல் மதியம் ஒரு மணி வரையும், மாலை ஐந்து மணி முதல் இரவு ஒன்பது மணி வரையும் என நேரத்தை மறுசீரமைக்கலாம். ஒரு நாளில் ஒருவருக்கான மதுபான விற்பனை அளவைக் கட்டுப்படுத்த விநியோக அட்டைகளை வழங்கும் முறையையும் ஆணையம் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துள்ளது. ஆணையம் மேலும் சில சமூக நலப் பரிந்துரைகளையும் வழங்கியுள்ளது. சம்பவத்தால் அனாதைகளான குழந்தைகளுக்கு கல்வி, உணவு, தங்குமிடம் ஆகியவற்றை அரசு உறுதி செய்ய வேண்டும். அவர்கள் கல்வி முடித்த பிறகு அரசு வேலை வாய்ப்பு அளிக்கலாம். கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தொழிற்சாலைகள் அமைத்து கல்வி கற்ற இளைஞர்களுக்கும் திறன் பெற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பு உருவாக்க வேண்டும். கள்ளச்சாராயத்தின் முக்கிய மூலமாக விளங்கும் கல்வராயன் மலைப்பகுதிக்கு தனியாக தடை அமலாக்கப் பிரிவை உருவாக்கலாம் என்றும் காரியலூர் காவல் நிலையத்தை மேம்படுத்தலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.இந்த அறிக்கை கள்ளச்சாராய விபத்தின் மூல காரணங்களை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளதுடன், மது தொடர்பான கொள்கைகளில் நீண்ட கால மாற்றங்களையும் பரிந்துரைத்துள்ளது. மக்களின் உயிர் பாதுகாப்பு, சமூக நலம் மற்றும் அடுத்த தலைமுறையின் எதிர்காலம் ஆகியவற்றை முன்னிறுத்தி அரசு இந்தப் பரிந்துரைகளை ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாபுரம் பகுதியில் 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடந்த கள்ளச்சாராய விபத்து தமிழகம் முழுவதையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. மெத்தனால் கலந்த விஷச்சாராயத்தை அருந்தியதால் அறுபதுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றனர். பெரும்பாலும் தினக்கூலி மற்றும் சமூகப் பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவினரே இந்த சோகத்திற்கு ஆளாயினர். சம்பவம் வெளியான உடன் அரசு நிவாரணம் அறிவித்ததுடன், ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கோகுல்தாஸ் தலைமையில் ஒருநபர் விசாரணை ஆணையத்தை அமைத்தது.

# இடைத்தேர்தலில் அதிமுக தனித்து போட்டி

## அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, செப். 9

தமிழ்நாட்டில் காலியாக உள்ள மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் அதிமுக தனித்து போட்டியிடும் என பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ளார்.

இதையடுத்து, வேட்பாளர் தேர்வு மற்றும் தேர்தல் பணிகளை கட்சி தீவிரப்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில், அதிமுக சார்பில் போட்டியிட விரும்பும் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் இன்று முதல் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு விருப்ப மனுக்களை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

பூர்த்தி செய்யப்பட்ட மனுக்களை குறிப்பிட்ட காலத்துக்குள் தாக்கல் செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆட்சிக்கு வந்த பிறகு அதிமுக கோட்டையில் தவெக சந்திக்கும் முதல் சவால்! தமிழக அரசியலில் பெரும் பரபரப்பு...!!! மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளில் அதிமுக வேட்பாளர்களை களமிறக்க முடிவு செய்துள்ளது. கூட்டணி கட்சிகளின் ஆதரவை எதிர்பார்க்காமல், தனித்து போட்டி என்ற முடிவை கட்சி தலைமை எடுத்துள்ளது.

இரு தொகுதிகளிலும் வெற்றி பெற்று கட்சியின் பலத்தை நிரூபிக்க வேண்டும் என்ற நோக்கில் தேர்தல் பணிகள் வேகமெடுத்துள்ளன. விருப்ப மனுக்கள் பெறப்பட்டதும், போட்டியிட விரும்புவோரின் பின்னணி மற்றும் தொகுதியில் உள்ள செல்வாக்கு உள்ளிட்ட அம்சங்களை பரிசீலித்து வேட்பாளர்களை இறுதி செய்ய அதிமுக தலைமை திட்டமிட்டுள்ளது.

# பெண் ஊழியர்கள் புறக்கணிப்பு புகழ்பெற்ற ஈபிள் டவர் மூடல்

பிரான்ஸ், செப். 9

பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸில் அமைந்துள்ள உலகப் புகழ்பெற்ற ஈபிள் கோபுரம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

கோபுரத்தின் ஊழியர்கள் நடத்திய திடீர் வேலை நிறுத்தம் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரான்ஸின் புகழ்பெற்ற ஈபிள் கோபுரத்தைப் பார்வையிட இந்து அமைப்பைச் சேர்ந்தவர்கள் வருகை தந்துள்ளனர்.

அப்போது அந்தக் குழுவினர் விடுத்த கோரிக்கையை ஏற்று, நிர்வாகம் பெண் ஊழியர்களை அவர்களின் பணியிடங்களில் இருந்து சிறிது நேரம் விலக்கி வைத்தது. மேலும், குறிப்பிட்ட அந்தச் சில மணி நேரங்களுக்கு ஆண் ஊழியர்கள் மட்டுமே பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். பாலின அடிப்படையில் பெண்களைப் பணியிடத்திலிருந்து ஒதுக்கி வைத்தது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல என்று கண்டித்து ஊழியர்கள் உடனடியாகப் போராட்டத்தில் குதித்தனர். இதன் காரணமாக ஈபிள் கோபுரம் தற்காலிகமாக மூடப்பட்டது. இச்சம்பவத்திற்குப் பிரான்ஸ் நாட்டின் அமைச்சர்கள் மற்றும் முக்கிய அரசியல் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து முறையான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளனர். இது குறித்து ஈபிள் கோபுரத்தை நிர்வகிக்கும் '' நிறுவனம் வெளியிட்ட அதிகாரப்பூர்வ அறிவிப்பில், இந்து அமைப்புக் குழுவினர் பெண்களுடனான தொடர்பைக் குறைக்குமாறு கோரிக்கை விடுத்தது உண்மைதான் என்றும், ஆனால் அந்த நிபந்தனையை நிர்வாகம் ஏற்றுக் கொண்டிருக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டுத் தனது தவறை வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளது. ஊழியர்களின் இந்த வேலைநிறுத்தம் காரணமாகத் தற்காலிகமாக மூடப்பட்டுள்ள ஈபிள் கோபுரம், விரைவில் சுமூகமான தீர் எட்டப்பட்டு இயல்பு நிலைக்குத் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழ்நாட்டில் தனியார் பல்கலைக்கழக மசோதா எதிர்ப்புகளை மீறி சட்டசபையில் நிறைவேற்றம்

சென்னை, செப். 9

தமிழ்நாடு சட்டப்பேரவையில் பலத்த கூச்சலையும் எதிர்ப்புகளையும் தாண்டி 'தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழக சட்டம்' அதிகாரப்பூர்வமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளிட்ட பல தரப்பினரின் கடுமையான எதிர்ப்புகளை மீறி இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது தமிழக அரசியல் களத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. கல்வித் துறையில் தனியார் ஆதிக்கத்தை இது ஊக்குவிக்கும் என்று எதிர்க்கட்சிகள் தரப்பில் தொடர்ந்து எச்சரிக்கப்பட்டு வந்த போதிலும், அரசு தனது முடிவில் உறுதியாக நின்று இந்தச் சட்டத்தை அமல்படுத்தியுள்ளது. குறிப்பாக, தமிழகத்தில் புதிய தனியார் பல்கலைக்கழகங்களைத் தொடங்குவதற்குத் தேவையான நிலத்தின் அளவு மற்றும் வைப்புத் தொகை ஆகியவை பெருமளவு குறைக்கப்பட்டுள்ளதற்குப் பாமக கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது சாதாரண மற்றும் எளிய மக்களின் நலன்களுக்குப் புறம்பான செயல் என்றும், வணிக நோக்கத்திற்கு மட்டுமே வழிவகுக்கும் என்றும் அவர்கள் வாதிட்டுள்ளனர். இதற்கிடையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ மாரிமுத்து பேசுகையில்,

இந்தத் தனியார் பல்கலைக்கழகச் சட்டம் ஒட்டுமொத்த சமூக நீதிக்கு எதிரானது என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டியுள்ளார். கல்வி வியாபாரமயமாக்கப்படுவதைத் தடுக்கும் பாதுகாப்பு வளையங்களை அரசு தகர்த்தெறிந்துவிட்டதாகக் கூறி அரசியல் கட்சித் தலைவர்களும் கல்வியாளர்களும் தங்களது எதிர்ப்புகளைப் பதிவு செய்து வருகின்றனர். எதிர்க்கட்சிகளின் தொடர் அமளிகளையும் மீறி சட்டமன்றத்தில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பது வரவிருக்கும் நாட்களில் மேலும் பல அரசியல் விவாதங்களுக்கும் போராட்டங்களுக்கும் வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மீண்டும் எகிறிய தங்கம் விலை ஒரே நாளில் ரூ.1120 அதிகரிப்பு

சென்னை, செப். 9

தங்கம் விலை (அதிரடியாக குறைந்த நிலையில் நேற்று தாறுமாறாக கூடியுள்ளது. சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை குறைந்து இருந்தது. ஆனால் சென்னையில் நேற்று ஒரே நாளில் ஆபரணத் தங்கம் சவரனுக்கு ரூ.1,120 அதிகரித்துள்ளது. நேற்று சென்னையில் ஒரு சவரன் தங்கம் ரூ.480 குறைந்து ரூ.1,13,040க்கு விற்பனை செய்யப்பட்டது.

தங்கம் விலை கடந்த சில மாதங்களாகவே ஊசலாட்டத்துடன் இருந்து வருகிறது. இம்மாத தொடக்கத்தில் சரிந்த தங்கம் விலை மீண்டும் உயர்ந்தது. தற்போது தங்கம் விலை மீண்டும் குறையத் தொடங்கியுள்ளது.

தங்கம் விலையானது சர்வதேச பொருளாதார சூழலுக்கு ஏற்ப நாள்தோறும் மாற்றியமைக்கப்பட்டு வருகிறது. கடந்த 1 ஆம் தேதி சென்னையில் ஒரு சவரன் ஆபரணத் தங்கம் ரூ. 14,175க்கும், ஒரு சவரன் ரூ.1,13,400க்கும் விற்பனை செய்யப்பட்டது. மறுநாள் மேலும் குறைந்து, ஒரு கிராம் ரூ.13,950க்கும், சவரன் ரூ.1,11,600க்கும் விற்பனை ஆனது. ஆனால் கடந்த 3 ஆம் தேதி ஷாக் கொடுத்த தங்கம் விலை மீண்டும் உயர்ந்தது. ஒரே நாளில் கிராமுக்கு ரூ.290 உயர்ந்து ரூ.14,240க்கும், சவரன் ரூ.1,13,920க்கும் விற்பனையானது. தொடந்து 4 ஆம் தேதியும் தங்கம் விலை உயர்ந்தது.

ஆனால் கடந்த 5 ஆம் தேதி சற்று குறைந்தது. தொடர்ந்து நேற்றும் தங்கம் விலை அதிரடியாக சரிந்தது. நேற்று ஒரே நாளில் சென்னையில் ஒரு சவரன் தங்கம் ரூ. 480 குறைந்தது. சென்னையில் நேற்று ஒரு கிராம் ரூ.60 குறைந்து, ரூ.14,130க்கும், ஒரு சவரன் ரூ.1,13,040க்கும் விற்பனை செய்யப்பட்டது. நேற்று சென்னையில் வெள்ளி விலையில் மாற்றமில்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.255க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில் நேற்று சர்வதேச சந்தையில் தங்கம் விலை சரிந்துள்ளது. இதனால் நேற்றும் நம் ஊரில் தங்கம் விலை குறையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தங்கம் விலை மீண்டும் உயர்ந்துள்ளது. சென்னையில் நேற்று ஒரு சவரன் ஆபரணத் தங்கம் ரூ.1,120 உயர்ந்து ரூ.1,14,160க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிராம் தங்கம் விலை ரூ.140 உயர்ந்து ரூ.14,270க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலை மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.255க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த சில நாட்களில் தங்கம் விலை நிலவரம் 8.09.2026 ஒரு சவரன் ரூ.1,14,160 நேற்று 7.09.2026 ஒரு சவரன் ரூ.1,13,040 (நேற்று) 6.09.2026 ஒரு சவரன் ரூ.1,13,520 5.09.2026 ஒரு சவரன் ரூ.1,13,520 4.09.2026 ஒரு சவரன் ரூ.1,14,880 3.09.2026 ஒரு சவரன் ரூ.1,13,920 2.09.2026 ஒரு சவரன் ரூ. 1,11,600 1.09.2026 ஒரு சவரன் ரூ.1,15,080 31.08.2026 ஒரு சவரன் ரூ.1,14,960 30.08.2026 ஒரு சவரன் ரூ.1.16,040 29.08.2026 ஒரு சவரன் ரூ.1.16,040 28.08.2026 ஒரு சாரன் ரூ.1,18,400 (மாலை) 28.08.2026 ஒரு சாரன் ரூ.1,17,200 (காலை) 26.08.2026 ஒரு சவரன் ரூ. 1,19,520 .

# பட்டுக்கோட்டைக்கு வழிகேட்டா கொட்டை பாக்குக்கு பதில் சொல்கிறார்

## முதல்வர் விஜய் மீது எ.வ.வேலு விமர்சனம்

சென்னை, செப். 9

சட்டப்பேரவை கூடியதும் , சட்டப்பேரவையில் முதலமைச்சர் விஜய் திட்டமிட்டு ஆதாரம் இல்லாமல் பேசியவற்றை அவை குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என திமுக சட்டமுன்ற உறுப்பினர் எ.வ.வேலு கோரிக்கை வைத்தார்.

சட்டப் பேரவையில் முதல்வர் விஜய், நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு மற்றும் சர்க்காரியா கமிஷன் விவகாரம் குறித்து குறிப்பிட்டது பேரவை மரபையும் விதிகளையும் மீறிய செயல் என திமுக கொறடா எ.வ.வேலு குற்றம் சாட்டினார்.

மேலும், மிசா மற்றும் முரசொலி மாறன் தொடர்பாக முதல்வர் விஜய் தெரிவித்த கருத்துகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் எனக் கூறினார்.

அமலாக்கத்துறை சொன்னதை தான் முதலமைச்சர் விஜய் கூறியுள்ளார். அமலாக்கத்துறை ஆவணத்தை பற்றி அவர் பேசியதில் தவறில்லை. முதலமைச்சரின் நேற்றைய பேச்சில் எதையும் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்போவதில்லை என சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் திட்டவட்டமாக கூறினார். முதல்வர் விஜய்யின் நேற்றைய பேச்சை அவை குறிப்பில் இருந்து நீக்கத் தேவையில்லை என்ற சபாநாயகரின் தீர்ப்பை எதிர்த்து சட்டசபையில் தி.மு.க. உறுப்பினர்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர்.

திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினார். அப்போது பேரவை நிகழ்ச்சிக்கு குந்தகம் விளைவிக்கும் தி.மு.க.வினர் மீது விதிகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கும்



படி அவை முன்னவர் செங்கோட்டையன் சபாநாயகரிடம் கோரிக்கை வைத்தார்.

சபாநாயகரின் பேச்சை கேட்காமல் தி.மு.க.வினர் தொடர்ந்து கூச்சலிட்டு வந்தனர். விதிகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கும் படி மீண்டும் செங்கோட்டையன் கூறியதால் தனது இருக்கை முன்பு போராட்டம் நடத்தும் தி.மு.க. வினரை வெளியேற்றும் படி உத்தரவிட்டார். அதையடுத்து தி.மு.க. எம்.எல்.ஏக்களை அவைக் காவலர்கள் குண்டுகட்டாக வெளியேற்றினர். சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய எ.வ.வேலு, " பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டா கொட்டைப் பாக்குக்கு முதலமைச்சர் நேற்று பதில் சொல்றாரு. முரசொலி மாறன் குறிந்து இந்தியாவுக்கு மட்டுமல்ல உலகத்துக்கே அவரை தெரியும்.

அவருக்கு ஒரு தபால் தலை டெல்லியில் வெளியிட்டார்கள். அப்போது அவரது குடும்பத்தினரையும் மத்திய அரசு அழைத்தது. தயாநிதி மாறன் இப்போது முதல்வராக இருக்கும் விஜயை அழைத்து சென்றார். முரசொலி மாறன் அவர்களின் தபால் தலையை வெளியிட போனீர்களே. அந்தகுடும்பம் தயாரித்த படத்தில் நடித்து பணம் வாங்குனீர்களே... அந்த விழாவுக்கு சென்ற நீங்கள் சட்டப்பேரவையில் நேற்று அவரை கொச்சைப்படுத்தி பேச வேண்டிய அவசியம் என்ன? இன்று பேரவைத் தலைவரை சந்தித்து விதிக்கும் முரணாக நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு மற்றும் சர்க்காரியா கமிஷன் விவகாரம் குறித்து குறிப்பிட்டது பேரவை மரபையும் விதிகளையும் மீறிய செயல், மிசா மற்றும் முரசொலி மாறன் தொடர்பாக முதல்வர் விஜய் தெரிவித்த கருத்துகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என 3 கோரிக்கைகளை வைத்தோம் அதனை சபாநாயகர் நிராகரித்து விட்டார்.

திமுக ஆட்சியில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த அண்ணன் ஸ்டாலின் நடத்திய ரியல் ஆட்சி. இப்போது நடப்பது ரீல்ஸ் ஆட்சி" என கடுமையாக சாடினார்.

**டேக் லிமிடெட்**
(முன்னார் டேக் சொல்யூஷன்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது)
CIN: L72100TN2000PLC046338
பதிவு அலுவலகம்: எண். பி3. எண். 9, பி பிளாக், அல்சா ஆர்கேட், 3-வது தளம், 2-வது அவென்யூ, அண்ணா நகர் கிழக்கு, சென்னை-600102, தமிழ்நாடு. தொலைபேசி: 8108618322
மின்னஞ்சல்: secretarial@takelimited.com. இணையதளம்: www.takelimited.com
காணொளிக் காட்சி/ஓஏவிஎம் வழியாக 25வது ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கான அறிவிப்பு

அனைத்து உறுப்பினர்களுக்கும் இதன்மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால்:
1. நிறுவனம், தனது 25வது ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கான ("ஏஜிஎம்") அறிவிப்பு மற்றும் 2025-26 நிதியாண்டிற்கான ஆண்டு அறிக்கை ஆகியவற்றை, அனுமதிக்கப்பட்ட முறையில், திங்கட்கிழமை, 07.09.2026 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பி முடித்துள்ளது.
2. நிறுவனத்தின் 25வது ஆண்டுப் பொதுக் கூட்டம் ("ஏஜிஎம்") செவ்வாய்க்கிழமை, 29.09.2026 அன்று மதியம் 12:00 மணிக்கு (ஐஎஸ்டி) விசி/ஓஏவிஎம் மூலம் நடைபெறும்.
3. ஆண்டுப் பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்கள், தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு மற்றும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது நடைபெறும் மின்னணு வாக்குப்பதிவு ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படலாம்.
4. உறுப்பினர்கள் மின்னணு வழிமுறைகள் மூலம் வாக்களிக்கும் வசதியை ("மின்னணு வாக்குப்பதிவு") சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (சிடிஎஸ்எல்) வழங்கும். அதற்கான விரிவான நடைமுறை ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.
5. தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு அல்லது ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிப்பதற்கான உறுப்பினர்களின் தகுதியை நிர்ணயிப்பதற்கான இறுதித் தேதி, செவ்வாய்க்கிழமை, 22.09.2026 ஆகும்.
6. தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவுக் காலம், சனிக்கிழமை, 26.09.2026 அன்று காலை 09:00 மணிக்கு (இந்திய நேரப்படி) தொடங்கி, திங்கட்கிழமை, 28.09.2026 அன்று மாலை 05:00 மணிக்கு (இந்திய நேரப்படி) முடிவடைகிறது. ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது வழங்கப்படும் மின்னணு வாக்குப்பதிவு வசதி மூலமாகவும் உறுப்பினர்கள் தங்களது வாக்குகளைப் பதிவு செய்யலாம்.
நிர்ணயிக்கப்பட்டகாலத்திற்குள்ஆய்வாளர்அறிக்கையுடன்அறிவிக்கப்படும்முடிவுகள், நிறுவனத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டு பங்குச் சந்தைகளுக்குத் தெரிவிக்கப்படும். மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான ஏதேனும் கேள்விகள் அல்லது சிக்கல்கள் ஏற்பட்டால், உறுப்பினர்கள் www.evotingindia.com என்ற இணையதளத்தில் உள்ள உதவிப் பிரிவின் கீழ் கிடைக்கும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு கையேட்டைப் பார்க்கலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதலாம் அல்லது 1800 21 09911 என்றஎண்ணிற்குஅழைக்கலாம்என்பதைகவனத்தில்கொள்ளுமாறுகேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வாரியத்தின் உத்தரவின்படி
டேக் லிமிடெட்டுக்கு
(முன்னர் டேக் சொல்யூஷன்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது)
எஸ்டி/-
செல்வி வந்தனா குப்தா
நிறுவனத்தின் செயலாளர் மற்றும் இணக்க அதிகாரி
உறுப்பினர் எண்: A54141

தேதி: 07.09 2026
இடம்: சென்னை